**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**
**2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**இ.ம.எண்.03/2020**
**இ.ம.எண்.01/2019**
**அ.வ.எண்.23/2014**

கண்ணுபையன் ...மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மலர்விழி
2. அறிவுக்கரசன்
3. அரவிந்தன்
4. கண்காணிப்பு பொறியாளர்,
   O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
   மேட்டுர் அணை.

5. செயற் பொறியாளர்,
   O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
   மேட்டுர் அணை.

6. உதவி செயற் பொறியாளர்,
   O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
   மேட்டுர் அணை.

7. உதவிப் பொறியாளர்,
   O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
   குஞ்சாண்டியூர். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 25.02.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வைத்திலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.G.மாலதி அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராகவும், 4 முதல் 7 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.P.சித்தன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் இ.ம.எண்.02/2019 ல் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்ய கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : -

அசல் வழக்கில் மனுதாரருக்கு பதிலாக மனுதாரரின் மகனை விசாரிக்க அனுமதி கோரி இ.ம.எண்.02/2019 தாக்கல் செய்து இன்று உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி இ.ம.எண்.01/2019 ல் 04.09.2014 ம் தேதியிட்ட மருத்துவ பரிசோதனை சான்று Ex. P2 ஆகவும், 22.06.2015 ம் தேதியிட்ட மருத்துவரின் சான்று Ex. P3 ஆகவும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் மேற்படி மனுவினை 06.09.2019 ல் Not press செய்துகொண்டதால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி 2 ஆவணங்களையும் தற்போது நிலுவையில் உள்ள இ.ம.எண்.02/2019 ல் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை Ex. P2 மற்றும் Ex. P3 ஆக குறியீடு செய்ய கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2,3 ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. இ.ம.எண்.02/2019 ல் மருத்துவ சான்றிதழை குறியீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. மருத்துவ சான்றிதழானது எந்த மருத்துவர் வழங்குகிறாரோ அவர் தான் முன்னிலைப்படுத்த முடியும். மருத்துவரை விசாரிப்பதற்காக மனுவை திறக்க மனுதாக்கல் செய்யாத நிலையில் சந்தேகத்திற்குரிய மருத்துவ ஆவணத்தை குறியீடு செய்ய முயற்சி செய்கிறார். சந்தேகத்திற்குரிய மருத்துவ ஆவணத்தை குறியீடு செய்வது அனுமதிக்கத்தக்கதல்ல என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது. இ.ம.எண்.01/2019 ம் உத்தரவிற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தான் வலியுறுத்தப்படவில்லை. இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்கு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என வாதிட்டார். ஆகவே அந்த குறையை நிவர்த்தி செய்வதற்காக மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3 ம்எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் மனுதாரருக்கு பதிலாக மனுதாரரின் மகனை விசாரிக்க அனுமதி கோரி இ.ம.எண்.02/2019 தாக்கல் செய்து இன்று உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டுள்ளது எனவும், மேற்படி இ.ம.எண்.01/2019 ல் 04.09.2014 ம் தேதியிட்ட மருத்துவ பரிசோதனை சான்று Ex. P2 ஆகவும், 22.06.2015 ம் தேதியிட்ட மருத்துவரின் சான்று Ex. P3 ஆகவும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டிருந்தது எனவும், ஆனால் மேற்படி மனுவினை 06.09.2019 ல் Not press செய்துகொண்டதால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது எனவும், மேற்படி 2 ஆவணங்களையும் தற்போது நிலுவையில் உள்ள இ.ம.எண்.02/2019 ல் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை Ex.P2 மற்றும் Ex.P3 ஆக குறியீடு செய்ய கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.02/2019 ல் மருத்துவ சான்றிதழை குறியீடு செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும், மருத்துவ சான்றிதழானது எந்த மருத்துவர் வழங்குகிறாரோ அவர் தான் முன்னிலைப்படுத்த முடியும் எனவும், மருத்துவரை விசாரிப்பதற்காக மனுவை திறக்க மனுதாக்கல் செய்யாத நிலையில் சந்தேகத்திற்குரிய மருத்துவ ஆவணத்தை குறியீடு செய்ய முயற்சி செய்கிறார் எனவும், சந்தேகத்திற்குரிய மருத்துவ ஆவணத்தை குறியீடு செய்வது அனுமதிக்கத்தக்கதல்ல என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது எனவும், இ.ம.எண்.01/2019 ம் உத்தரவிற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தான் வலியுறுத்தப்படவில்லை எனவும், இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்கு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என வாதிட்டார் எனவும், ஆகவே அந்த குறையை நிவர்த்தி செய்வதற்காக மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3 ம்எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இ.ம.எண்.01/2019 ல் மனுதாரர் தரப்பில் மருத்துவ சான்றிதழ்கள் ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டு அம்மனு வலியுறுத்தப்படவில்லை என்பதால் 06.09.2019 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் தான் மேற்படி ஆவணங்களை இம்மனுவில் குறியீடு செய்ய கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணங்கள் சந்தேகத்திற்குரியது என

கட்சி செய்வதால் அதனை குறித்து தற்போது தீர்மானிக்க முடியாது. அந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு பின்னிட்டு உத்தரவின் போது தான் தீர்மானிக்க முடியும். எனவே எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் ஒரு ஆவணத்தை குறியீடு செய்வதால் அதனை நிரூபித்ததாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. இந்நிலையில் இந்த மனுவில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய விசாரணை நீதிமன்றமான இந்நீதிமன்றத்தில் தான் குறியீடு செய்ய அனுமதி வழங்க முடியும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் எதிர்மனுதாரர்களின் ஆட்சேபணைகள் அனைத்தும் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யும்பொழுது தெரிவிக்கலாம் என அனுமதி வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

**ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**